(முழுப் பதிப்புரிமையுடையது)

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

## இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டடக் கலைஞர் சேவை அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

## நிதி முறைமைகள் (12)

**3 மணித்தியாலங்கள்**

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

---

01) அ) திரட்டுநிதி அமையப் பெற்றுள்ள விதம் மற்றும் அதன் கீழ் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் தொடர்பாக நிதிப்பிரமானங்கள் வழங்கியுள்ள ஏற்பாடுகள் குறித்து சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) அரசமுற்பணக் கணக்குகள் தொடர்பான கீழ்வரும் விடயங்களை சுருக்கமாக எழுதுக.

i. செலவுகளுக்கான அதிகபட்ச எல்லை
ii. வரவு மீதி தொடர்பான அதிகபட்ச எல்லை

(10 புள்ளிகள்)

02) அ) 2013ம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் மீண்டெழும் செலவினங்களையும் முதலீட்டுச் செலவினங்களையும் மேற்கொள்வதற்கும், அரச கடன்களை மீளளிப்பதற்கும், நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விதம் தொடர்பாகவும் அச்செலவினங்களையும் பொறுப்புக்களையும் மேற்கொள்வதற்கு வருமானங்களும் கடன்களும் பயன்படுத்தப்பட்டுள்ள முறை தொடர்பாகவும் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) அரசாங்கம் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதில், கீழ்வரும் திணைக்களங்களின் வகிபாகத்தினைச் சுருக்கமாக விளக்குக.

I. தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம். (05 புள்ளிகள்)
II. அரசிறைக் கொள்கைத் திணைக்களம். (03 புள்ளிகள்)
III. தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களம். (02 புள்ளிகள்)

03) 'பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் தமக்குக் கீழ் காணப்படும் திணைக்களங்களின் நிதி நிருவாகம் தொடர்பாக நிதியமைச்சருக்குப் பொறுப்புக் கூறல் வேண்டும்' இக்கூற்றினை நி.பி 127 இனை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

04) 'அரச செலவினங்கள் சிறந்த முகாமையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன' நிதிப் பிரமாணங்களையும் பெறுகைச் செயன்முறை வழிக்காட்டல்களையும் அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

05) அ) உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை நி.பி 381 இன் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) காலாவதியான காசோலைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நி.பி 396 இன் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

06) அ) பல்வேறுபட்ட பெறுகைக் குழுக்களைப் பெயரிடுக. (05 புள்ளிகள்)

ஆ) பல்வேறுபட்ட பெறுகைச் செயன்முறைகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

இ) கேள்வி பிணையொன்றைப் (Bid Bond) பெற்றுக் கொள்வதற்கான தேவை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

ஈ) பல்வேறுபட்ட முறைமைகளின் கீழ் கேள்விப்பத்திரங்களை முன்வைப்பதற்கு வழங்க வேண்டிய ஆகக் குறைந்த கால எல்லைகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

****************